# 13 பௌத்த எண்ணப் போக்கு

உலகத்துச் சமயத்தாபகர்களுள் புத்தபகவான் ஒருவர்தாம் தம்மை ஒரு சாதாரண மனிதன் என ஒப்புக் கொண்டவர். சமயத்தாபகர் என்று அவரைக் கூறுவதானால் பொது வழக்கிலுள்ள சாதாரண அர்த்தத்திலேதான் அவ்வாறு கூறலாம். ஏனைய சமயத்தாபகர்கள் தம்மைக் கடவுளாகவோ, கடவுளின் பல வடிவு கொண்ட அவதாரமாகவோ, கடவுளின் அருள் பெற்றவராகவோ கருதினர்.



புத்தர் தாம் சாதாரண மனிதப் பிறவியென ஒப்புக் கொண்டது மாத்திரமன்றி, எந்தத் தெய்வத்தின் அருளோ, எந்த விதமான புறச்சக்தியின் ஆற்றலோ தமக்கிருந்ததாகக் கூறிக் கொள்ளவில்லை. மனித முயற்சியையும் மனித விவேகத்தையும் கொண்டே தாம் சாதித்த சாதனைகளும் பெற்ற பேறுகளும் தமக்கு வாய்த்தனவென்று கூறினார். மனித நிலையில் உள்ள ஒருவனே புத்தப்பேற்றை அடைய முடியும். திடசங் கற்பத்தோடு முயலும் எந்த மனிதனும் புத்தநிலையை அடையக் கூடிய திறமை உடையவனாயிருக்கிறான். அதனால் புத்தர் மனிதருள் மிகச் சிறந்தவர் என்று கூறலாம். அவரிடத்து பூரணமான மனிதப் பண்பு நிறைந்திருந்தபடியால் பிற்காலத்தில் சமய பக்தியுடையவர்கள் அவரை ‘‘அதி மனிதன் ” எனக் கொண்டாடினர்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

(பௌத்தக் கோட்பாட்டின் படி மனிதனே மிக உயர்ந்தபடியில் உள்ளவன். தனக்குத்தானே தலைவனாயிருப்பவன் மனிதன்.) அவனுடைய விதியை நிர்ணயிக்க அவனைவிட மேலான சக்தி எங்குமில்லை.

''தானே தனக்குச் சரண். வேறுயார் தனக்குச் சரணாயிருக்க முடியும்?'' என்று பகவான் கூறியிருக்கிறார். '' நீங்களே உங்களுக்குச் சரணாயிருங்கள் வேறு எந்த இடத்திலும் சரண்புக வேண்டியதுமில்லை. வேறு எவரிடமும் உதவிதேட வேண்டியதுமில்லை'', என அவர் தமது சீடர்க்கு அறிவுரை கூறினார்.

மனிதன் தன் முயற்சியாலும் விவேகத்தினாலும் தன்னைப் பந்தித்த தளைகளை எல்லாம் அறுக்கும் திறமுடையனென்பதால் அவன் தன்னை வளர்த்துக் கொள்ளுமாறு பகவான் மனிதனுக்கு அறிவுரை வழங்கி உற்சாகமூட்டித் தூண்டினார். '' நீங்கள் உங்கள் கருமங்களை நீங்களே செய்ய வேண்டும். 'ததாகதர்கள்' உங்களுக்கு வழியை மாத்திரம் காட்டுவார்கள்'' என்று புத்தபகவான் கூறியுள்ளார்.

புத்தரை ''ரட்சகர்'' என்று குறிப்பிடுவதானால் இந்த அர்த்தத்திலேதான் குறிப்பிடலாம். அதாவது நிர்வாணமென்ற விடுதலைக்கு வழியைக் கண்டு காட்டியவர் என்ற வகையில். ஆனால் அந்த வழியில் நாங்களே நடந்து விடுதலை பெற வேண்டுமேயன்றி எங்களுக்காக இன்னொருவர் விடுதலையைப் பெற்றுத் தரமுடியாது.

(''வெகுளியை அன்பால் வெல்லுக. தீமையை நன்மையால் வெல்க. கோபத்தைக் கொடையால் வெல்க; பொய்யைச் சத்தியத்தால் வெல்க'')

ஒருவன் அயல்நாட்டை வென்று அடிமையாக்க ஆசையும் வேட்கையும் கொள்வானானால் அவனுக்குச் சமாதானமோ சுகமோ கிடையாது.

பகவான் கூறுகிறார், '' வெற்றி துவேஷத்தை வளர்க்கிறது. தோல்வியடைந்தோர் துயரமடைகின்றனர். சமாதானத்தை விரும்புவோர் வெற்றி தோல்வியிரண்டையும் விட்டுச் சுகமாக வாழ்கின்றனர்.''

தன்னை வென்றவனே சமாதானமும் சுகமும் அடைகிறான். '' போர்க் களத்தில் ஆயிரமாயிரம் மக்களை வெற்றி கொண்டவனிலும் பார்க்கத் தன்னைத் தானே அடக்கி ஆள்பவன் மேலான வெற்றி வீரனாவான்.''

இவையெல்லாம் ரொம்ப அழகாகத்தானிருக்கின்றன. உயர்ந்தவை; மாண்பு மிக்கவை. ஆனால் யார் இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறார்கள்.

இவை திண்ணை வேதாந்தம் என்று நீங்கள் சொல்லக்கூடும். அப்படியானால் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளுதல் காரிய பூர்வமான செயலா? ஒருவரையொருவர் கொல்வது பயனுடையதா? சதா பயமும் சம்சயமும் கொண்டு காட்டுமிராண்டிகள் போல வாழ்வது பயனுள்ள செயலா? சௌகரியமானதா? காரிய பூர்வமானதா? பகையை எப்போதாவது பகையினால் வென்றிருக்கிறீர்களா? கொடுமையை கொடுமையினால் வென்றிருக்கிறீர்களா ஆனால் தனிப்பட்ட முறையிலே பகையை அன்பினால் வென்ற வரலாறு உண்டு. தீமையை நன்மையால் வென்ற சந்தர்ப்பங்களும் உண்டு தனிப்பட்டவர் விஷயத்தில் இது சாத்தியமாகலாம். தேசங்களைப் பொறுத்தவரையில் சர்வதேச பிரச்சனைகளைப் பொறுத்த வரையில் இது சாத்தியமில்லையென்று கூறுவீர்கள். 'தேசம்' 'நாடு' 'சர்வதேசம்' என்ற பிரசாரப் போக்குடைய அரசியல் மயமான சொற்களைக் கேட்டு மக்கள் உள்ளம் மயக்கமடைகிறது. தன்வசமிழக்கிறது, ஏமாற்றமடைகிறது. தேசமென்றாலென்ன? மக்களின் கூட்டமல்லது தேசமோ, நாடோ செயல்புரிகிறதா? தனிப்பட்டவர்தான் செயல்புரிகிறார்கள். தனிப்பட்டவர் நினைப்பதையும் செய்வதையுமே தேசம் நினைக்கிறது, செய்கிறது. தனிப்பட்டவர்க்குப் பொருத்தமானதே நாட்டுக்கும் பொருத்தமாகிறது. பகையை அன்பினாலும் கருணையினாலும் தனிப்பட்ட முறையில் தணிக்க முடியுமானால் தேசரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தணிப்பதற்கு ஏன் முடியாது? தனிப்பட்டவர் கூட பகையை அன்பினால் தணிப்பதனால் ஒருவரிடம் எல்லையற்ற தைரியமும், வீரமும், சிரத்தையும், ஆன்மபலத்தில் நம்பிக்கையும் வேண்டும். அப்படியானால் சர்வதேச விஷயங்களில் இப்பண்புகள் எவ்வளவு அதிகம் தேவைப்படுகின்றன.



காரியபூர்வமானதன்றெனக் கூறும்போது அது சுலபமானதன்றெனப் பொருள் கொள்வீரானால் நீர் சொல்வது சரி. அது உண்மையில் அத்துணைச் சுலபமானதன்றுதான். ஆனால் அதை முயன்று பார்க்கவேண்டும். அது அபாயம் மிக்கதானால் அணு ஆயுத யுத்தத்தை விட ஆபத்தானதா?

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒரு பேர் அரசன் இந்தியாவில் இருந்தான். அவன் பௌத்த சக்கரவர்த்தியாக கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே அஹிம்சை, சமாதானம், கருணை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பெரிய ராச்சியத்தை ஆண்டான். அசோகன் உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் இக் கொள்கைளையே மேற்கொண்டான். அவனிடம் அவ்வாறு செய்யத் தைரியமும், சிரத்தையும் காட்சியும் இருந்தன. அவனுக்குத் ‘‘ தேவர்களுக்குப் பிரியமானவன் ’’ என்ற பெயர் வழங்கப்பட்டது. இன்று இவற்றை நினைக்கும் போது பெரிய ஆறுதலும் மனத்திலே எத்துணை அருட் கிளர்ச்சியும் உண்டாகின்றது.

முதலிலே அப்பேரரசன் தன் தந்தையான பிந்துசாரனும், பேரனான சந்திரகுப்தனும் காட்டிய வழியிற் சென்று இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் வென்று வெற்றிவாகை சூட எண்ணினான். கலிங்கத்தின் மீது படையெடுத்து அதை வென்று தன் ராச்சியத்தோடு சேர்த்துக் கொண்டான். இலட்சக்கணக்கானவர் இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டும் காயமுற்றும் சிறைப்படுத்தப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் இருந்தனர். பின்னர் அவன் புத்த மதத்தைத் தழுவியதும் புத்தரின் அறநெறி அவனை முற்றாக மாற்றிவிட்டது. கற்பாறையில் அவன் செதுக்குவித்த பிரசித்தி பெற்ற சிலாசாசனமொன்றிலே (இது 13 ஆவது சிலாசாசனம் எனப்படும். இதனை இன்றும் காணலாம்.) கலிங்க வெற்றியைப்பற்றி அவன் பகிரங்கமாகத் தன் பச்சாதாபத்தைத் தெரிவிக்கிறான். அந்த உயிர்க் கொலையை நினைக்கும் போது ‘‘ தன்னெஞ்சம் வெடிக்கிறதெனக்’’ கூறி இனிமேல் போருக்கென்று வாள் வீசுவதில்லையெனவும் எல்லா உயிர்களும் இம்சையடையாது தன்னடக்கமும் அமைதியும் மென்மையு முடையனவாய் வாழ வேண்டுமென்றும் பகிரங்கமாகப் பிரசித்தப்படுத்தினான். தேவர்க்கும் பிரியனான அசோகன் இதையே மேலான வெற்றியாகக் கருதுகிறான், அதாவது தர்மத்தினால் பெற்ற வெற்றி (தம்மவிஜய). அவன் போரைத் துறந்ததுமட்டுமன்றி ‘‘ என் புத்திரரும், பௌத்திரரும் புதியதொரு வெற்றியை ஒரு பொருளாகக் கொள்ளமாட்டார்’’ எனத்தன் விருப்பத்தையும் தெரிவித்தான். தர்மவிஜயத்தையே பெரிய வெற்றியாக அவர்கள் கருதுவாராக. அது இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்குமெனக் கருதினான்.

உலக சரித்திரத்திலே தன் அதிகாரத்தின் உச்சநிலையிலேயிருந்த ஓர் வெற்றி வேந்தன் மேலும் நாடுகளைக் கைப்பற்றும் வல்லமை பெற்றிருந்த ஒருவன், போர் வேண்டாம், இம்சை வேண்டாம், சமாதானமும் அஹிம்சையுமே வேண்டுமென்று கூறி யுத்தத்தை கைவிட்ட ஒரே ஒரு சந்தர்ப்பம் இதுவே.

உலகம் மேற்கொள்ள ஒரு போதனை இங்கே உண்டு. ஒரு சக்கரவர்த்தி போரையும் பலாத்காரத்தையும் வெறுத்து, அஹிம்சையையும் சமாதானத்தையும் மேற்கொள்ளுகிறார். அசோகனுடைய தர்மிஷ்டப் போக்கை வாய்ப்பாகக் கொண்டு அயல்நாட்டு மன்னர் அவன் மீது படையெடுத்ததாகச் சரித்திரத்தில் சான்றில்லை. அவன் உயிரோடிருந்த காலத்தில் அவனுடைய ராச்சியத்தில் உள்நாட்டுப் புரட்சிகளேற்பட்டதாகச் செய்தி இல்லை. நாடெங்கிலும் சமாதானமே நிலவிற்று. அவனுடைய ராச்சியத்துக்கு புறம்பாயுள்ள நாட்டவரும் அவனுடைய கருணை மிக்க தலைமையை ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. வல்லரசுகளின் பலத்தைச் சமன்படுத்துவதாலோ, அணு ஆயுதங்களைக் கொண்டு வெருட்டுவதாலோ, சமாதானத்தை ஏற்படுத்தலாமென்று பேசுவது மடைமை. ஆயுதப் பெருக்கம் பயத்தை உண்டாக்குமேயன்றி சமாதானத்தை உண்டாக்காது. பயத்தினால் உண்மையான சமாதானத்தை நிலைநாட்டலாம் என்று நினைப்பது முடியாத காரியம். பயத்தினால் துவேஷமும், பகைமையும், குரோதமுமே உண்டாகும். தற்காலிகமாக அவை அடங்கியிருக்கும், ஆனால் தருணம் ஏற்பட்டதும் எந்நேரமும் வெடித்துச் சீறி வெளிவரும். மைத்திரி நல்லெண்ணம் நிலவ வேண்டும். பயம், சம்சயம், ஆபத்து என்பன அற்ற சூழநிலையில் தான் உண்மையான சமாதானம் நிலவும்.

அதிகாரப் போட்டியில்லாத, வெற்றி தோல்விகளில்லாத சாந்தியும் சமாதானமுமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே பௌத்தத்தின் நோக்கம். இங்கே பாவம் பழி அறியாதவர் இம்சிக்கப்பட மாட்டார்கள். ராணுவ பலத்தாலும் பொருளாதார யுத்தத்தினாலும் கோடிக்கணக்கான மக்களை வெற்றி கொள்பவனை விட தன்னைத்தான் அடக்கி வென்றவனையே மக்கள் மதிப்பர். பகையை அன்பினால் வெல்வார்கள். நன்மையினால் தீமையை வெல்வார்கள்; அழுக்காறு, குரோதம், பகை, எண்ணம், பேராசை என்பன அம்மக்களுடைய மனதைக் களங்கப்படுத்த மாட்டா. மக்கள் கருணையினால் தம் தொழிலெல்லாவற்றையும் செய்வர. சிறிய ஜந்துக்கள் உட்பட எல்லோரும் நீதியோடும், மதிப்போடும் அன்போடும் நடத்தப்படுவர். வாழ்வு, லௌகீக சுபீட்சம் நிறைந்ததாய் சமாதானமும் நல்லிணக்கமும் உடையதாய், உயர்வற உயர்ந்த நிர்வாண சுகத்தை நோக்கிச் செல்லும். அதுவே பரமார்த்தம்.

புத்தபகவான் அருளிய போதனை<br>
வல்பொல இராகுலர்<br>
தமிழில் :- நவாலியூர் சோ. நடராசர்

## கிரகித்தற் பயிற்சி

1. 'அதிமனிதன்' என புத்தபகவான் போற்றப்படக் காரணம் என்ன?
2. ஒரு மனிதன் ஆன்ம விடுதலையைப் பெற்றுக் கொள்வது பற்றி புத்தபகவானின் கருத்து யாது?
3. பின்வருவனவற்றை எவற்றால் வெல்ல வேண்டும் என புத்தர் குறிப்பிடுகின்றார்.
   (அ) வெகுளி -
   (ஆ) தீமை -
   (இ) கோபம் -
   (ஈ) பொய் -
4. இக் கட்டுரையின் மையக் கருத்து யாது?
5. மையக்கருத்தை வலியுறுத்த கட்டுரையாசிரியர் கையாண்ட உத்தி யாது?
6. இக்கட்டுரையை வாசித்து முடித்ததும் உமது மனதில் தோன்றும் எண்ணங்கள் யாவை?
7. இக்கட்டுரையை வாசிக்கும் போது உமது மனதை பாதித்த அல்லது பிடித்த வரிகளை எழுதுக.
8. இக் கட்டுரையில் கூறப்படும் விழுமியக் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
9. ''அசோகச் சக்கரவர்த்தி ஒரு சிறந்த அரசன்'' இக் கூற்றை மதிப்பீடு செய்க.
10. ''போர்க்களத்தில் ஆயிரமாயிரம் மக்களை வெற்றி கொள்பவனிலும் பார்க்கத் தன்னைத் தானே அடக்கி ஆள்பவன் மேலான வெற்றி வீரனாவான்'' இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? காரணம் தருக.

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. **''யாதும் ஊரே யாவரும் கேளிர். ''** சமாதானமே மக்களை மகிழ்வுடன் வாழ வைக்கும். எனும் பொருளில் உரை ஒன்றினை தயார் செய்து வகுப்பறையில் பேசிக் காட்டுங்கள்.
2. இப்பாடப்பரப்பினை மையமாகக் கொண்டு வில்லிசை ஒன்றினைத் தயாரித்து மேடையேற்றுங்கள்.
   (குழுக்களாகப் பிரிந்து செய்வது சிறப்பானது)

# இலக்கணம

## வேற்றுமை II

### ஏழாம் வேற்றுமை

♦ இதனை இடவேற்றுமை என மொழியியலாளர்கள் சுட்டுவர்.

**ஏழாம் வேற்றுமை**

- **உருபுகள்**
  **கண், இல், உள், இடம்**
- **பொருள்**
  **இடப்பொருள்**

♦ இவ்வேற்றுமையின் உருபுகள் 28 என நன்னூல் கூறுகிறது.

**(உ + ம்)**

1. அப்பா வீட்டில் இருக்கிறார். (இல்)
2. புத்தகம் மேசையில் உள்ளது. (இல்)

**இடப்பொருள்**

- **பருப்பொருள் சார்ந்த இடம்**

  **(உ + ம்)**
  1. வீட்டில் இருந்தார்
  2. பாதையில் சென்றார்

- **பருப்பொருள் சாராத இடம்**

  **(உ + ம்)**
  1. அவரது சிந்தனையில் தெளிவு உண்டு.
  2. தமிழில் நல்ல இலக்கிய நூல்கள் உள்ளன.

♦ காலவரையறையை உணத்தவும் ‘இல்’ உருபு பயன்படுகின்றது.

**(உ + ம்)** ஒரு வாரத்தில் திரும்பி விடுவேன்.

♦ ஒரு குழுவினுள் அமையும் பிறிதொரு குழுவைச் சுட்டவும் ‘இல்’ உருபு பயன்படுகின்றது.

**(உ + ம்)** முப்பது மாணவர்களில் ஐவர் வரவில்லை.

## எட்டாம் வேற்றுமை

- இதனை விளிவேற்றுமை என மொழியியலாளர்கள் சுட்டுவர்.

- பேசுவோன், படர்க்கை இடத்துக்குரியவரை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பேசுவதே விளிவேற்றுமை எனப்படும்.

- எட்டாம் வேற்றுமைக்குத் தனியாக உருபுகள் இல்லை. எனினும் பெயர்ச் சொற்களின் ஈறு அடையும் திரிபினால் அது உணர்த்தப்படுகின்றது.

**(உ + ம்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | மகனே வா | - | ஈற்றில் 'ஏ' மிகுந்தது. |
| 2. | அன்னாய் பார் | - | ஈற்று 'ஐ' ஆய் எனத் திரிந்தது. |
| 3. | நண்ப கேள் | - | ஈற்று 'ன்' கெட்டது. |
| 4. | தம்பி வா | - | இயல்பாய் நின்றது. |
| 5. | மக்காள் வாரீர் | - | ஈற்றயல் எழுத்துத் திரிந்தது. |

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் வேற்றுமை உருபேற்ற சொற்களை இனங்கண்டு அவை எப்பொருளில், எத்தனையாம் வேற்றுமையில் வந்துள்ளன என்பதை குறிப்பிடுக.

1. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.
2. மயிலின் தோகை அழகானது.
3. மகனே ஏனிந்த வேலை?
4. A . R. ரஹ்மானுக்கு ஒஸ்கார் விருது கிடைத்தது.
5. அப்பா கடையில் இருக்கிறார்.
6. மரக்கிளையின்கண் குருவிக்கூடு தொங்கியது.
7. நாங்கள் மூன்று மாதங்களில் வகுப்பேற்றப்படுவோம்.
8. குழந்தைகளில் சிலர் குறும்புக்காரர்கள்.
9. காலத்தைப் பயன்படுத்திக் கொள் தம்பீ!
10. நெல்மணிக்குள் அரிசி இருப்பதும் அதிசயமா?

எட்டு வேற்றுமைகளையும் விளக்கும் விதத்தில் வேற்றுமை, உருபு, சொல்லுருபு, பொருள், உதாரண வாக்கியங்கள் கொண்ட அட்டவணை ஒன்றை குழுவாக இணைந்து தயாரியுங்கள்.